**தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்.**

**முன்னிலை :- திருமதி.Dr.R.லதா M.A., M.L., Ph.D.,**

**தலைமை நீதித்துறை நடுவர், திருவாரூர்.**

**2026 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 11 ஆம்நாள்வியாழக்கிழமை**

**திருவள்ளுவராண்டு 2055, ஸ்ரீ பராபவ வருடம், வைகாசி திங்கள் 28 ஆம் நாள்**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.110/2023**

CNR. No.TNTV02-005564– 2023

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | | தமிழ்நாடு அரசுக்காக குற்ற முறையிடுபவர் | | காவல் ஆய்வாளர்<br>தாலுக்கா காவல்நிலையம்,<br>திருவாரூர்.<br>குற்ற எண்.780/2021 |
| 2 | | எதிரியின் பெயர் | | சேகர்<br>த/பெ.சுப்பிரமணியன் |
| 3 | | தொழில் | | விவசாயம் |
| 4 | | முகவரி | | தலையாரி களம், ராதா நஞ்சை |
| 5 | | வயது | | 54/2021 |
| 6 | | எதிரி தலைமறைவாக இருந்த நாட்கள் | | -- |
| 7 | | எதிரி கைது செய்யப்பட்ட நாள் | | 19.09.2021 |
| 8 | | பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | | 08.10.2021 |
| 9 | | அடைப்புக்காவலில் இருந்த நாட்கள் | | 20 நாட்கள் |
| 10 | | புகார் அளிக்கப்பட்ட நாள் | | 19.09.2021 |

LATHA Digitally signed by LATHA Date: 2026.06.11 18:03:09 +0530

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11 | | இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | | 30.12.2021 | |
| 12 | | எதிரிகளிடம் குற்றச்சாட்டுக்கள் வனைந்து கு.வி.மு.ச.பிரிவு 228-இன் கீழ் வினவப்பட்ட நாள் | | 10.01.2024 | |
| 13 | | கு.வி.மு.ச. பிரிவு 317-இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களைத் தவிர்த்து, குற்றவியல் பல்வகை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட விபரம் மற்றும் அவற்றில் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவினை எதிர்த்து மேல் முறையீட்டு நீதிமன்றங்களில் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்திரவின் விபரம் | | | |
| 14 | | சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ள நாட்கள் | | | |
| | அ.சா.1 | திரு. பூபதி (சிறப்பு உதவி ஆய்வாளர்) | | 20.05.2026 | 20.05.2026 |
| | அ.சா.2 | திரு.ஜானி ரஞ்சித் (முதல்நிலை காவலர்) | | 20.05.2026 | 20.05.2026 |
| | அ.சா.3 | திரு.அன்பழகன் (காவல் உதவி ஆய்வாளர்) | | 03,06,2026 | 03.06.2026 |

LATHA Digitally signed by LATHA
Date: 2026.06.11 18:03:14 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| 15 | | எதிரிகளிடம் கு.வி.மு.ச. பிரிவு 313(1) (பி) இன் கீழ் வினவப்பட்ட நாள் | | 04.06.2026 |
| 16 | | மேலமை நீதிமன்றங்களால் பிறப்பிக்கப்பட்டுள்ள தடை உத்தரவு மற்றும் அதன் முடிவு | | -- |
| 17 | | எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டு | | பிரிவு 4(1)(aaa) TNP Act |
| 18 | | எதிரியின் பதிலுரை | | குற்றவாளி இல்லை |
| 19 | | அரசுதரப்பு கூடுதல் குற்றத்துறை வழக்குரைஞர் | | திரு.S.பகீரதன் |
| 20 | | எதிரி தரப்பு வழக்குரைஞர் | | திரு.தன ஆனந்தமுருகன் |
| 21 | | நீதிபதியின் தீர்வு | | எதிரி குற்றவாளி இல்லை. |
| 22 | | தீர்ப்பு | | முடிவாக, எதிரிக்கு எதிரான வனையப்பட்ட பிரிவு 4(1)(aaa) தமிழ்நாடு மதுவிலக்கு சட்டத்தின்கீழான குற்றச்சாட்டு அரசுத்தரப்பில் உரிய சாட்சிய, சான்றாவணங்களின் கொண்டு நிரூபிக்காததால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை குற்றவாளி இல்லை என முடிவு செய்து, எதிரியை கு.வி.மு.ச.பிரிவு 248(1)ன்கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி எழுதிக்கொடுத்த பிணைமுறியை மேல்முறையீட்டு காலத்திற்கு ரத்து செய்யவும் உத்தரவிடப்படுகிறது. |

LATHA Digitally signed by LATHA Date: 2026.06.11 18:03:25 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | இவ்வழக்கில் சி.பி.எண்.05/2025 ன்கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள குறியீடு செய்யப்படாத SHO சீல் வைக்கப்பட்ட விஷ தன்மையுடைய 500 எம்எல் வீதம் கொண்ட பாண்டி சாராயம் பாட்டில்கள் இரண்டினை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு சட்டப்படி அழிக்கவும் உத்தரவிடப்படுகிறது. |

இவ்வழக்கு கடந்த 04.06.2026 ம் தேதியன்று இறுதி விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டு, அரசுத்தரப்பில் கற்றறிந்த குற்றத்துறை கூடுதல் அரசு வழக்கறிஞர் நிலை II திரு.S.பகீரதன் அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பு வழக்கறிஞர் திரு.தன ஆனந்தமுருகன் அவர்கள் ஆஜராகியும் எடுத்துரைத்த வாதங்கள் கேட்கப்பட்டு, வழக்கின் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு, இந்நீதிமன்ற சீரிய பரிசீலனையில் இருந்து வந்து இன்று (11.06.2026) இந்நீதிமன்றம் வழங்கும்,

**<u>தீர்ப்புரை</u>**

திருவாரூர் தாலுக்கா காவல் சரகம், ராதாநஞ்சை தலையாரி களம் என்ற முகவரியை சேர்ந்த சேகர் த/பெ.சுப்பிரமணியன் இவ்வழக்கின் எதிரி 19.09.2021 ஆம் தேதி காலை 9 மணிக்கு அவரது வீட்டின் பின்புறம் சாக்குமூட்டையில் 15 லிட்டர் பிடிக்கக்கூடிய 11 பாலிதீன் பைகளில் தலா 10 லிட்டர் வீதம் சுமார் 110 லிட்டர் பாண்டி சாராயத்தை எவ்வித அரசு அனுமதியோ, உரிமமோ இன்றி அதிக விலைக்கு விற்க வைத்திருந்துள்ளதால் எதிரி பிரிவு 4(1)(aaa) TNP ACT ன்கீழ் தண்டிக்கத்தக்கவர் என திருவாரூர் தாலுக்கா காவல் உதவி ஆய்வாளர் அவர்களால் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

LATHA

Digitally signed by LATHA
Date: 2026.06.11 18:03:46 +0530

**2)** இவ்வழக்கு திருவாரூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.110/2023 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் அவருக்கு வழக்கு ஆவணங்களின் நகல்கள் கு.வி.மு.ச.பிரிவு 207 ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. பின்னர் வழக்கு ஆவணங்களை பார்வையிட்டும், இரு தரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும் இவ்வழக்கின் குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிட்டுள்ள விவரங்களின் படி முதல் நோக்கு வழக்கு இருப்பதாகத் தோன்றியதால் எதிரிக்கு எதிராக பிரிவு 4(1)(aaa) TNP ACT ன்கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டது. அதனை எதிரி மறுத்தார். திருவாரூர் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் நிலுவையிலிருந்து இவ்வழக்கினை தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்ற 2 நடவடிக்கை தேதி 23.10.2025 ன்படி இந்த வழக்கு மாற்றம் செய்யப்பட்டு கடந்த 25.10.2025 அன்று இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டது. எனவே, அரசுத் தரப்பு சாட்சிய விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**3)** இவ்வழக்கில் அரசுத்தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**4)** **<u>வழக்கின் சாராம்சம்</u>**

(i) அ.சா.1 பூபதி தனது சாட்சியத்தில், தற்போது கூத்தாநல்லூர் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், திருவாரூர் தாலுக்கா காவல்நிலைய தலைமைக்காவலராக பணிபுரிந்து வந்தபோது கடந்த 19.09.2021ம் தேதி காலை 9 மணியளவில் அ.சா.3 உதவி ஆய்வாளர் திரு.அன்பழகன், அ.சா.2 முதல்நிலை காவலர் திரு.ஜானி ரஞ்சித் ஆகியோருடன் மதுவிலக்கு சம்பந்தமாக ரோந்து சென்றபோது ராதா நஞ்சை, தலையாரிகளம் என்ற முகவரியை சேர்ந்த எதிரி அவரது வீட்டின் பின்பு சாக்குமூட்டையுடன் நின்றுகொண்டிருந்தவரை விசாரித்தபோது முன்னுக்கு பின் முரணாக பதிலளித்ததால் அவர் வைத்திருந்த சாக்குமூட்டையை

LATHA Digitally signed by LATHA Date: 2026.06.11 18:03:51 +0530

சோதனை செய்ததில் 15 லிட்டர் பிடிக்கக்கூடிய பாலித்தீன் பையில் தலா 10 லிட்டர் வீதம் 11 பாலித்தீன் பைகளில் 110 லிட்டர் சாராயத்தை எவ்வித அரசு அனுமதியோ, எவ்வித உரிமமோ இன்றி வைத்திருந்ததால் குற்றகாரணம் கூறி அவரை கைது செய்து, அதன்பின்னர் எதிரி வைத்திருந்த வழக்கு சொத்தினை தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் அ.சா.1 பூபதி, அ.சா.2 ஜானி ரஞ்சித் ஆகியோர் அ.சா.3 உதவி ஆய்வாளர் திரு.அன்பழகன் முன்னிலையில் சான்று பொருளை கைப்பற்றி கைப்பற்றுதல் மகசரில் சாட்சி கையொப்பம் செய்துள்ளார்.

பின்னர் 09.15 மணியளவில் 650 எம்.எல் பிடிக்கக்கூடிய இரண்டு பாட்டில்களில் தலா 500 எம்எல் வீதம் மாதிரிக்கு எடுக்கப்பட்டு மீதமுள்ள 109 லிட்டர் சாராயத்தை அதே இடத்தில் 09.30 மணியளவில் கொட்டி அழித்து அழிப்பு மகசர் தயார் செய்து சாட்சி கையொப்பம் செய்துள்ளார். பின்னர் எதிரி மற்றும் தடயத்துடன் நிலையம் வந்து எதிரி மீது குற்ற எண்.780/2021 ன்கீழ் சட்டப்பிரிவு 4(1)(aaa), 4(1-A) TNP ACT ன்கீழ் உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்ததாகவும், உதவி ஆய்வாளர் விசாரித்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.1 ஆகவும், அழித்தல் மகசர் அ.சா.ஆ.2 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

(ii) அ.சா.2 ஜானி ரஞ்சித் தனது சாட்சியத்தில், தற்போது கீழச்சேவல்பட்டி காவல்நிலைய முதல்நிலை காவலராக பணிபுரிந்து வருவதாகவும், திருவாரூர் தாலுக்கா காவல்நிலைய முதல்நிலைக்காவலராக பணிபுரிந்து வந்தபோது கடந்த 19.09.2021ம் தேதி காலை 9 மணியளவில் அ.சா.3 உதவி ஆய்வாளர் திரு.அன்பழகன், அ.சா.1 தலைமைக்காவலர் திரு.பூபதி ஆகியோருடன் மதுவிலக்கு சம்பந்தமாக ரோந்து சென்றபோது ராதா நஞ்சை, தலையாரிகளம் என்ற முகவரியை சேர்ந்த எதிரி அவரது வீட்டின் பின்பு சாக்குமூட்டையுடன் நின்றுகொண்டிருந்தவரை விசாரித்தபோது முன்னுக்கு பின் முரணாக பதிலளித்ததால் அவர் வைத்திருந்த சாக்குமூட்டையை சோதனை செய்ததில் 15 லிட்டர் பிடிக்கக்கூடிய பாலித்தீன் பையில் தலா 10 லிட்டர் வீதம் 11 பாலித்தீன் பைகளில் 110 லிட்டர் சாராயத்தை எவ்வித அரசு அனுமதியோ, எவ்வித உரிமமோ

LATHA Digitally signed by LATHA Date: 2026.06.11 18:03:55 +0530

இன்றி வைத்திருந்ததால் குற்றகாரணம் கூறி அவரை கைது செய்து, அதன்பின்னர் எதிரி வைத்திருந்த வழக்கு சொத்தினை தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் அ.சா.1 பூபதி, அ.சா.2 ஜானி ரஞ்சித் ஆகியோர் அ.சா.3 உதவி ஆய்வாளர் திரு.அன்பழகன் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றி சாட்சி கையொப்பம் செய்துள்ளார். பின்னர் 09.15 மணியளவில் 650 எம்.எல் பிடிக்கக்கூடிய இரண்டு பாட்டில்களில் தலா 500 எம்எல் வீதம் மாதிரிக்கு எடுக்கப்பட்டு மீதமுள்ள 109 லிட்டர் சாராயத்தை அதே இடத்தில் 09.30 மணியளவில் கொட்டி அழித்து அழிப்பு மகசர் தயார் செய்து சாட்சி கையொப்பம் செய்துள்ளார். பின்னர் எதிரி மற்றும் தடயத்துடன் நிலையம் வந்து எதிரி மீது குற்ற எண்.780/2021 ன்கீழ் சட்டப்பிரிவு 4(1)(aaa), 4(1-A) TNP ACT ன்கீழ் உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்ததாகவும், உதவி ஆய்வாளர் விசாரித்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

(iii) அ.சா.3 திரு.அன்பழகன் தனது சாட்சியத்தில், திருவாரூர் தாலுக்கா காவல்நிலைய உதவி ஆய்வாளராக பணிபுரிந்து தற்போது பணி ஓய்வு பெற்று பின்னவாசல் அண்ணாநகரில் வசித்து வருவதாகவும், கடந்த 19.09.2021 ம் தேதி திருவாரூர் தாலுக்கா காவல்நிலைய தலைமைக்காவலர் அ.சா.1 பூபதி, முதல்நிலை காவலர் அ.சா.2 ஜானி ரஞ்சித் 1417 ஆகியோருடன் மதுவிலக்கு சம்பந்தமாக ராதா நஞ்சை கிராமத்தில் கண்காணித்து வந்தபோது ராதா நஞ்சை, தலையாரி களம் என்ற இடத்தில் எதிரி அவரது வீட்டின் பின்புறம் ஒரு சாக்கு மூட்டையுடன் நின்று கொண்டிருந்ததால் போலீசாரை கண்டதும் ஓட எத்தனித்தவரை பார்ட்டி சகிதம் வளைத்து பிடித்து விசாரித்தபோது முன்னுக்கு பின் முரணாக முகவரியை கூறி சேகர், வயது.54, த/பெ.சுப்பிரமணியன், தலையாரி களம், ராதா நஞ்சை, திருவாரூர் என்று கூறியுள்ளார்.

பின்னர் அவர் நின்று கொண்டிருந்த இடத்தை சோதனை செய்தபோது ஒரு சாக்குமூட்டையில் 15 லிட்டர் பிடிக்கக்கூடிய பாலித்தீன் பையில் தலா 10 லிட்டர் வீதம் 11 பாலித்தீன் பைகளில் 110 லிட்டர் பாண்டி சாராயத்தை எவ்வித அரசு அனுமதியும், உரிமமுமின்றி வைத்திருந்ததால் அவரை குற்றக்காரணம்

LATHA Digitally signed by LATHA Date: 2026.06.11 18:04:00 +0530

கூறி 09.00 மணியளவில் கைது செய்து மேற்படி தடயத்தை தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் போலீசார் முன்னிலையில் 09.15 மணியளவில் சுமார் 650 எம்எல் பிடிக்கக்கூடிய 2 பாட்டில்களில் 500 எம்எல் வீதம் மாதிரிக்கு எடுத்து தடயத்தை மகசரில் கைப்பற்றியும், ஆய்வாளரின் உத்தரவுப்படி மீதமுள்ள 109 லிட்டர் விஷதன்மையுடைய பாண்டி சாராயத்தை சம்பவயிடத்திலேயே 09.30 மணியளவில் கொட்டி அழித்து அழித்தல் மகசர் தயார் செய்து, பின்னர் எதிரி மற்றும் தடயத்துடன் நிலையம் வந்து எதிரி மீது குற்ற எண்.780/2021 சட்டப்பிரிவு 4(1)(aaa), 4(1-A) TNP ACT ன்கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி, பின்னர் அ.சா.1 பூபதி மற்றும் அ.சா.2 ஜானி ரஞ்சித் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கின் விஷ தன்மையுடைய சாராயம் கொரனோ தொற்று பரவல் காரணமாக இரசாயன பகுப்பாய்வு உட்படுத்த காலதாமதமாகி விட்டதால் இவ்வழக்கின் சட்டப்பிரிவான 4(1)(aaa) TNP Act r/w.4(1)(aaa) 4(1-A) TNP Act லிருந்து பிரிவு 4(1)(aaa) TNP Act ஆக சட்டப்பிரிவு மாற்று அறிக்கை தயார் செய்து இத்துடன் விசாரணை முடித்து எதிரி மீது பிரிவு 4(1)(aaa) TNP Act ன்கீழ் 30.12.2021 ம் தேதி இறுதியறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும், சட்டப்பிரிவு மாற்று அறிக்கை அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இத்துடன் அரசுத்தரப்பு சாட்சியங்கள் முடித்துக்கொள்ளப்பட்டது.

5) அரசுத்தரப்பு சாட்சியங்களில் எதிரிக்கு பாதகமாக உள்ள சாட்சிய சங்கதிகள் குறித்து கு.வி.மு.ச. பிரிவு 313(1)(அ)ன் படி எதிரியின் கவனத்திற்கு கொண்டு வந்து வினவிய போது, எதிரி சாட்சிகளின் சாட்சியத்தை மறுத்தனர். எதிரி தரப்பில் சாட்சிகள் இல்லை என்று கூறியதன்பேரில் எதிரி தரப்பு சாட்சியம் முடித்துக்கொள்ளப்பட்டது.

6) இவ்வழக்கில் நாம் தீர்மானிக்க வேண்டிய பிரச்சினை யாதெனில், வழக்கு சம்பவத்தின்போது எதிரி எவ்வித அரசு அனுமதியோ, உரிமமோ இன்றி 110 லிட்டர் பாண்டி சாராயத்தை சுய லாப நோக்கம் கருதி விற்பனைக்கு

LATHA Digitally signed by LATHA Date: 2026.06.11 18:04:06 +0530

வைத்திருந்ததாக எதிரி மீது 4(1)(aaa) TNP Act ன்கீழ் வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டானது அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

7) கற்றறிந்த அரசுத்தரப்பு வழக்கறிஞர் தனது வாதுரையில், அரசுத்தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோரின் சாட்சியமும் சான்று ஆவணமும் கொண்டு எதிரிக்கு எதிரான வழக்கு அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆகவே, எதிரிக்கு தக்க தண்டனை வழங்கி உத்தரவிடும்படி வாதிடப்பட்டது.

8) கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் தனது வாதுரையில், வழக்கு சொத்துகள் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதா என்று அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றும், இவ்வழக்கில் அழிப்பு மகசர் தகுந்த அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரி முன்பு வைத்து அழிப்பு மகசர் தயார் செய்யப்படவில்லை என்பதால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்பதால் அரசுத்தரப்பில் எதிரிக்கு எதிரான குற்றத்தை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கவில்லை என்றும், எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை விடுதலை செய்து உத்தரவிடும்படி வாதிடப்பட்டது.

**9)** இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. வழக்கின் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**10)** அரசுத்தரப்பு வழக்கின்படி, 19.09.2021ம் தேதி திருவாரூர் தாலுக்கா காவல்நிலைய தலைமைக்காவலர் அ.சா.1 பூபதி, முதல்நிலை காவலர் அ.சா.2 ஜானி ரஞ்சித் 1417 ஆகியோருடன் மதுவிலக்கு சம்பந்தமாக ராதா நஞ்சை கிராமத்தில் கண்காணித்து வந்தபோது ராதா நஞ்சை, தலையாரி களம் என்ற இடத்தில் ஒரு சாக்கு மூட்டையுடன் எதிரி அவரது வீட்டின் பின்புறம் கொண்டு நின்று கொண்டிருந்ததாகவும் அப்போது அங்கு வந்த போலீசாரை கண்டதும் ஓட எத்தனித்ததாகவும் பார்ட்டி சகிதம் வளைத்து பிடித்து விசாரித்தபோது முன்னுக்கு பின் முரணாக முகவரியை கூறியதாக சாட்சி அளித்தபோது

LATHA Digitally signed by LATHA Date: 2026.06.11 18:04:11 +0530

அதனை நிரூபிக்கும் வகையில் தனிநபர் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

10.1) பின்னர் அவர் நின்று கொண்டிருந்த இடத்தை சோதனை செய்தபோது ஒரு சாக்குமூட்டையில் 15 லிட்டர் பிடிக்கக்கூடிய பாலித்தீன் பையில் தலா 10 லிட்டர் வீதம் 11 பாலித்தீன் பைகளில் 110 லிட்டர் பாண்டி சாராயத்தை எவ்வித அரசு அனுமதியும், உரிமமுமின்றி வைத்திருந்ததாக குறிப்பிட்டபோதும் எதிரியிடம் இருந்து கைப்பற்றுதல் மகசரிலில் கைப்பற்றப்பட்ட சாராயமானது ஆய்விற்காக அனுப்பபடவில்லை என்பதும் அ.சா.3 சாட்சியத்திலிருந்து தெரியவருகிறது.

10.2) இந்நிலையில் சம்பவத்தின்போது எதிரியானவர் தனது வீட்டின் பின்புறம் விஷ தன்மையுடைய சாராயத்தை வைத்திருந்ததாக குற்றப்பத்திரிக்கையில் கூறப்பட்டுள்ளநிலையில், கு.வி.மு.ச.பிரிவு 100(4)ன்படி போலீசார் ஒரு இடத்தை சோதனை மேற்கொண்டால் அந்த இடத்தை இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தனிப்பட்ட நபர்களை சாட்சிகளை வைத்துக்கொண்டு விசாரணை செய்யவேண்டுமென்று தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

10.3) மேலும், கைப்பற்றுதல் மகசர் சாட்சிகளான அ.சா.1, அ.சா.2 ஆகியோர் தங்களது சாட்சியத்தில், சம்பவயிடத்தில் தனிநபர் முன்னிலையில் சோதனையிட்டு எதிரியிடமிருந்து 110 லிட்டர் சாராயம் கைப்பற்றப்பட்டு அழிப்பு மகசர் மூலம் அழிக்கப்பட்டது என குறிப்பிட்ட போதும் தனிநபர் இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சியாக விசாரிக்கப்படவில்லை.

10.4) மேலும் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் சாராயத்தினை அ.சா.1 தலைமைக்காவலர் மற்றும் அ.சா.2 முதல்நிலைகாவலர் ஆகியோர் முன்னிலையில்தான் அழிக்கப்பட்டுள்ளது. அதற்கான காவல்துறை நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை. மேலும். தமிழ்நாடு மதுவிலக்கு அமலாக்க சட்டம் பிரிவு பிரிவு 32(c)-இல்

LATHA Digitally signed by LATHA Date: 2026.06.11 18:04:15 +0530

***Sec. 32(c) of the TNP Act***

*(c) May search any person, vessel, vehicle, animal package, receptacle or covering,upon whom or in or upon which, he may have reasonable cause to suspect any suchliquor, drug or other article to be or to be concealed:*

*[Provided also that where any [illicit arrack] is seized under this section by any officer or person, such officer or person may, in the presence of a* ***Prohibition Officer or any Police officer not below the rank of Inspector,----***

*(i) take two samples of the [illicit arrack] or such quantity and in such manner as may be prescribed, and*

*(ii) destroy or cause to be destroyed the [illicit arrack] and send the pots or other receptacles in which the [illicit arrack] was kept together with the samples taken and a certificate from the Officer in whose presence the samples were taken and the [illicit arrack] was destroyed, as to the total quantity of [illicit arrack] seized, the total quantity taken as samples and the total quantity destroyed, to the Magistrate having jurisdiction to inquiry into the case. The Magistrate shall, upon the receipt of the samples, retain onein his Court and send the other to such Officer as may be prescribed for chemical Analysis*

**இவ்வாறாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.**

LATHA
Digitally signed by LATHA
Date: 2026.06.11 18:04:20 +0530

மேலும், தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம் பிரிவு 32 ன்படி மது அழிக்கப்படுவதற்கு மாதிரிகள் எடுக்கப்படுவதற்கு உரிய சான்றிதழ் தயாரிப்பதற்கு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம்

*Selvi -vs- State Rep. by on 18 March 2011* என்ற வழக்கில்

> *"It has been stated "A close reading of the above third provision to section 32(C)of the TN Prohibition Act would make it abundantly clear that the officer who has seized the illicit arrack can take samples only in the presence of a Prohibition Officer or any Police Officer not below the rank of an Inspector of Police and then he can destroy the remaining contraband". In respect of the destruction, the said Prohibition Officer or Police Officer, in whose presence the destruction is done. Should give a certificate in respect of the total quantity seized the total quantity taken as samples and total quantity destroyed and such certificate should be forwarded to the Magistrate having Jurisdiction. But in this case, drawing of samples as well as the destruction were not made in the presence of either a Prohibition officer or any Police officer not below the rank of an Inspector of Police. It may be true that PW8 himself is an Inspector of Police but that by itself will not satisfy the requirements of the above provision. Here, we have to look into the object behind the said proviso, In the case where the officer, who seizes illicit arrack, decides to destroy the same after drawing samples, in order to ensure that samples were really taken from illicit arrack seized and the rest of the illicit arrack was destroyed, the presence of yet another responsible officer namely a Prohibition Officer or any Police Officer not below the rank of Inspector is insisted upon. This Procedure in my considered opinion, is mandatory as the object behind the same is to ensure that there is no manipulation at the hands of the officer who seized the illicit arrack"*

LATHA Digitally signed by LATHA
Date: 2026.06.11 18:04:24 +0530

என கூறப்பட்டுள்ளது. இந்நிலையில், காவல் ஆய்வாளர் கைப்பற்றுதல் மகசர் மற்றும் அழிப்பு மகசர் தயார் செய்யும்போது மதுவிலக்கு ஆய்வாளர் அல்லது மற்றொரு காவல் ஆய்வாளருக்கு குறைவில்லாத பதவியில் உள்ள வேறொரு காவல் அதிகாரியின் முன்னிலையில் வழக்கு சொத்துகள் கைப்பற்றப்படவேண்டுமென்றும், அந்த முன்னிலையான அதிகாரி தனக்கு முன்பு எவ்வளவு தடயப்பொருட்கள் கைப்பற்றப்பட்டது அதில் எவ்வளவு மாதிரிக்கு எடுக்கப்பட்டது மற்றும் அதில் எவ்வளவு தன் முன்பு அழிக்கப்பட்டது என்பது குறித்து தனியாக அறிக்கையினை நீதிமன்றத்திற்கு அனுப்பவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

10.5) இந்த வழக்கில் மேற்படி நடைமுறை பின்பற்றப்படவில்லை. இந்த வழக்கில் அரசுத்தரப்பு சாட்சியங்களை பார்க்கும்போது அ.சா.1, அ.சா.2 ஆகியோர் தங்களது முதல் விசாரணையில் மாதிரிக்கு எடுக்கப்பட்டது போக மீதமுள்ள கைப்பற்றப்பட்ட சாராயத்தை தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம் பிரிவு 32 முறையாக பின்பற்றி அழிக்கப்படவில்லை என்பது தெளிவாகிறது.

10.6) மேலும், எதிரியிடமிருந்து கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றப்பட்ட தடயப்பொருளான 110 லிட்டர் பாண்டி சாராயத்தை எவ்வித அரசு அனுமதியோ, உரிமமோ இன்றி வைத்திருந்ததாக குறிப்பிட்டபோதும், சம்பவயிடம் மக்கள் அதிகமாக நடமாடும் இடம் என ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளதாலும், எதிரியை அடையாளப்படுத்த தனிநபர் சாட்சியம் யாரும் இவ்வழக்கில் விசாரிக்காதநிலையில், மேற்படி மாதிரி எடுக்கப்பட்ட பாண்டி சாராயம் பகுப்பாய்விற்கு அனுப்பவில்லை என அ.சா.3 சாட்சியமளித்திருக்கும் நிலையிலும், கெட்ட நெடியுடன் கூடிய வாடை வீசிய மயக்கம் தரக்கூடிய தன்மையுடைய சாராயம் அனுமதியின்றி எதிரி வைத்திருந்தார் என்பது அரசுத்தரப்பில் உரிய தனிநபர் சாட்சிகளை கொண்டும் நிரூபிக்கவில்லை என்பதாலும், அ.சா.3 உதவி ஆய்வாளரின் சாட்சியத்தை மட்டுமே அரசுத்தரப்பு வழக்கை நிரூபிக்க போதுமானதாக இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

LATHA Digitally signed by LATHA Date: 2026.06.11 18:04:29 +0530

இந்நிலையில் கீழ்க்கண்ட மாண்புமிகு உச்சநீதிமன்ற முன்தீர்ப்பான

(2024) 2MLJ (CRL) 449 (SC)

LNIND 2024 SC 208

IN THE SUPREME COURT OF INDIA

**Anees vs The State Govt Of NCT on 3 May, 2024 என்ற வழக்கில்**

51. The presumption of fact is an inference as to the existence of one fact from the existence of some other facts, unless the truth of such inference is disproved.

52. To explain what constitutes a prima facie case to make Section 106 of the Evidence Act applicable, we should refer to the decision of this Court in Mir Mohammad (supra), wherein this Court has observed in paras 36 and 37 respectively as under:

*"36. In this context we may profitably utilize the legal principle embodied in Section 106 of the Evidence Act which reads as follows: "When any fact is especially within the knowledge of any person, the burden of proving that fact is upon him."*

*37. The section is not intended to relieve the prosecution of its burden to prove the guilt of the accused beyond reasonable doubt. But the section would apply to cases where the prosecution has succeeded in proving facts from which a reasonable inference can be drawn regarding the existence of certain other facts, unless the accused by virtue of his special knowledge regarding such facts, failed to offer any explanation which might drive the court to draw a different inference."*

என குறிப்பிட்டுள்ளதன்படி, எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டை உரிய சாட்சிய, சான்றாவணங்களை கொண்டு நிரூபிக்க வேண்டியது அரசுத்தரப்பு கடமையாகிறது. ஆனால், இவ்வழக்கில் அவ்வாறு அரசுத்தரப்பில் எதிரிக்கு எதிரான வழக்கு நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

LATHA
Digitally signed by LATHA
Date: 2026.06.11 18:04:33 +0530

10.7) முடிவாக, எதிரிக்கு எதிரான வனையப்பட்ட பிரிவு 4(1)(aaa) தமிழ்நாடு மதுவிலக்கு சட்டத்தின்கீழான குற்றச்சாட்டு அரசுத்தரப்பில் உரிய சாட்சிய, சான்றாவணங்களின் கொண்டு நிரூபிக்காததால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை குற்றவாளி இல்லை என முடிவு செய்து, எதிரியை கு.வி.மு.ச.பிரிவு 248(1)ன்கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி எழுதிக்கொடுத்த பிணைமுறியை மேல்முறையீட்டு காலத்திற்கு ரத்து செய்யவும் உத்தரவிடப்படுகிறது.

10.8) இவ்வழக்கில் சி.பி.எண்.05/2025 ன்கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள குறியீடு செய்யப்படாத SHO சீல் வைக்கப்பட்ட விஷ தன்மையுடைய 500 எம்எல் வீதம் கொண்ட பாண்டி சாராயம் பாட்டில்கள் இரண்டினை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு சட்டப்படி அழிக்கவும் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரிடையாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் படித்துப் பார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 11.06.2026 இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

LATHA Digitally signed by LATHA Date: 2026.06.11 18:04:39 +0530

தலைமை நீதித்துறை நடுவர்.
திருவாரூர்.

**I. அரசுத்தரப்பு சாட்சிகள் :-**

அ.சா.1 திரு.பூபதி - சிறப்பு உதவி ஆய்வாளர்

அ.சா.2 திரு.ஜானி ரஞ்சித் - முதல் நிலை காவலர்

அ.சா.3 திரு.அன்பழகன் - காவல் உதவி ஆய்வாளர்

LATHA Digitally signed by LATHA Date: 2026.06.11 18:04:44 +0530

**II. அரசுத்தரப்பு சான்றாவணங்கள் :-**

அ.சா.ஆ.1 – கைப்பற்றுதல் மகசர்

அ.சா.ஆ-2 - அழித்தல் மகசர்

அ.சா.ஆ.3 – முதல் தகவல் அறிக்கை

அ.சா.ஆ.4 – சட்டப்பிரிவு மாற்று அறிக்கை

**III. சான்றுப் பொருட்கள் :-** அரசுத்தரப்பில் குறியீடு செய்யப்படவில்லை

**IV. எதிரி தரப்புச் சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்றுப்பொருட்கள் :-**

இல்லை

LATHA Digitally signed by LATHA Date: 2026.06.11 18:04:48 +0530

தலைமை நீதித்துறை நடுவர்.

திருவாரூர்.